# திருநெல்வேலி மாநகராட்சி

## 18.05.2022 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்ட பொருட்கள் மற்றும் தீர்மானங்கள் விவரம்

---

## பொருட்கள்

1) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், புதிய வார்டு எண் 17 பழையபேட்டை சரோஜினித்தெருவில் புதிய தெருவிளக்குகள் அமைக்க மாண்புமிகு மேயர் அவர்களின் மக்கள் குறைதீர்க்கும் நாளில் மனு வரப்பெற்றுள்ளது. மேற்படி பகுதியில் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் 10 எண்ணம் தெருவிளக்குகளுக்கு மின்பாதை அமைத்து 40வாட்ஸ் LED விளக்குகள் 10 எண்ணமும், புதிய மின்கம்பங்கள் 2 எண்ணம் தெருவிளக்கு லைனுடன் அமைத்து 40 வாட்ஸ் LED விளக்குகள் 2 எண்ணமும் ஆக மொத்தம் 12 எண்ணம் தெருவிளக்கு அமைப்பதற்கும் தெருவிளக்குகளின் மதிப்பீட்டு, மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ 3.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டுள்ளபடி, பொதுமக்களின் கோரிக்கையை ஏற்றும், பொதுமக்களின் நலன் கருதி புதிய வார்டு எண் 17 பழையபேட்டை சரோஜினித்தெருவில் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்கு மின்பாதை அமைத்து 40வாட்ஸ் LED விளக்குகள் 10 எண்ணமும், புதிய மின்கம்பங்கள் 2 எண்ணம் தெருவிளக்கு லைனுடன் அமைத்து 40 வாட்ஸ் LED விளக்குகள் 2 எண்ணமும் ஆக மொத்தம் 12 எண்ணம் தெருவிளக்குகள் அமைக்கவும், தெருவிளக்குகள் பொருத்துவதற்கான மதிப்பீடு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ 3.00 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்
(இ1/0736/ 2022)

**தீர்மானம் எண்: 18 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

---

2) திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம், வார்டு எண் 25 பாளை பேருந்து நிலையத்தின் மேல் பகுதியில் அமைந்துள்ள பாளையம் கால்வாய் குறுக்காக நேசநயினார் தெரு மற்றும் காரியநாயனார் தெருவிற்கு செல்லும் 4” PVC குடிநீர் விநியோக பிரதான குழாய் சுமார் 25 மீட்டர் நீளத்திற்கு உடைப்பு ஏற்பட்டுவிட்டதால், மேற்படி தெருக்களுக்கு குடிநீர் வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சுமார் 250

வீடுகளுக்கு குடிநீர் விநியோகம் பாதிப்பு அடைந்துள்ளது. தற்போது மேற்படி குடியிருப்புகளுக்கு மாநகராட்சி குடிநீர் லாரி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மேற்படி பாளையம் கால்வாய் விவசாயத்துக்கு தண்ணீர் திறந்து விடப்படுவதால் பொதுப்பணித்துறை மூலம் ஒவ்வொரு வருடமும் மேற்படி கால்வாய் தூர்வாரும் பணியின் போதும் உடைப்பு ஏற்படும் மற்றும் கால்வாய் தண்ணீர் திறந்து விடும் போதெல்லாம் குழாய் தண்ணீரில் அடித்துச் செல்லப்படுகிறது. எனவே, இதனால் அப்பகுதியில் குடிநீர் வழங்குவது அவ்வப்போது பாதிப்படைகிறது. எனவே, மேற்படி 25 மீட்டர் நீளத்திற்கு Earth Work செய்து குழாயினை Anchorage Arrangement மூலம் 4” C.I. குழாய் பதிக்கப்பட்டால் தான் வரும் காலங்களில் இதுபோன்ற சேதம் ஏற்படாத வகையில் பாதுகாக்க முடியும். எனவே, குடிநீர் பணியின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டும், அப்பகுதி பொதுமக்களின் நலன் கருதியும் மேற்படி பணியை மேற்கொள்வதற்கு ரூ.2,40,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட குடிநீர் பணியின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டும் மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் உடனடியாக பணி மேற்கொள்ள உள்ளூர் விலைபுள்ளிகள், பெற்று மேற்படி பணியை மேற்கொள்ள பெறப்பட்ட மூன்று உள்ளூர் விலை புள்ளிகளின் விபரம்.

1. சிவபால குரு கண்ஸ்ட்ரக்ஸன்,
   10C, அழகப்பபுரம் தெற்கு தெரு,
   பாளையங்கோட்டை, திருநெல்வேலி. - மதிப்பீட்டை விட 0.5% குறைவாக

2. திரு. S. செல்வம்,
   17, வரதராஜபுரம் தெரு,
   திருநெல்வேலி ___ 627001. - மதிப்பீட்டை விட 1% அதிகம்

3. திரு. S. ஜான் ஜெலஸ்டின்,
   30, விநாயகர் தெரு,
   பாளையங்கோட்டை, திருநெல்வேலி - மதிப்பீட்டுதொகைக்கு செய்கிறேன்.

மேற்கண்ட பணி குடிநீர் பணி என்பதால் பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு, மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் உடனடியாக மேற்கொள்ள செலவினத் தொகை ரூ.2,40,000/- ஆகும். எனவே, பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு, மேற்கண்ட பணியை மேற்கொள்ளவும், அதற்கான மதிப்பிட்டு தொகை ரூ.2,40,000/-க்கு நிர்வாக அனுமதியும் மேலும் மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள பெறப்பட்ட விலை புள்ளிகளில் குறைந்த விலை புள்ளியான மதிப்பீட்டை விட 0.50% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.சிவபாலகுரு கண்ஸ்ட்ரக்ஸன் நிறுவனத்தின் விலைப்புள்ளியை அங்கீகரிக்கவும், தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994-ஆம் வருடத்திய சட்டப் பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பாளையம் கால்வாய் குறுக்காக நேசநயினார் தெரு மற்றும் காரியநாயனார் தெருவிற்கு செல்லும் 4” PVC குடிநீர் விநியோக பிரதான குழாய் சுமார் 25 மீட்டர் நீளத்திற்கு உடைப்பு ஏற்பட்டுவிட்டதால், மேற்படி தெருக்களுக்கு குடிநீர் வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் சுமார் 250 வீடுகளுக்கு குடிநீர் வினியோகம் பாதிப்பு அடைந்துள்ளது. எனவே, மேற்படி 25 மீட்டர் நீளத்திற்கு Earth Work செய்து குழாயினை Anchorage Arrangement மூலம் 4" C.I. குழாய் பதிக்கப்பட்டால் தான் வரும் காலங்களில் இதுபோன்ற சேதம் ஏற்படாத வகையில் பாதுகாக்க முடியும். மேற்படி பணியை மேற்கொள்வதற்கு ரூ.2,40,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட குடிநீர் பணியின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2.40லட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், மேலும் மேற்படி பணி குடிநீர் பணியாக இருப்பதால், பொதுமக்கள் நலன் கருதி தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994ஆம் வருடத்திய சட்டப் பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொள்ளவும் மற்றும் மதிப்பீட்டை விட 0.50% குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் **திரு.**சிவபாலகுரு கண்ஸ்ட்ரக்ஸன் நிறுவனத்திற்கு வேலை ஆணை வழங்கியதற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 19 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

---

3) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 18, பேட்டை அண்ணாமலைநகர் விரிவாக்க பகுதியில் புதிய தெருவிளக்குகள் அமைக்க திருநெல்வேலி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததின் பேரில் மேற்படி பகுதியில் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்கு மின்பாதை அமைத்து 40 வாட்ஸ் LED விளக்குகள் 14 எண்ணமும், புதிய மின்கம்பங்கள் நிறுவப்பட்டு தெருவிளக்கு பாதை அமைத்து 40 வாட்ஸ் LED விளக்குகள் 9 எண்ணமும் ஆக மொத்தம் 23 எண்ணம் தெருவிளக்கு அமைக்க தெருவிளக்குகளின் பொருத்துவதற்கான மதிப்பீட்டு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ.4.80 இலட்சத்திற்கு மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டுள்ளபடி திருநெல்வேலி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கையை ஏற்றும், பொது மக்களின் நலன் கருதி வார்டு எண் 18, பேட்டை அண்ணாமலை நகர் விரிவாக்க பகுதியில் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்கு மின்பாதை அமைத்து 40 வாட்ஸ் LED விளக்குகள் 14 எண்ணமும், புதிய மின்கம்பங்கள் நிறுவப்பட்டு தெருவிளக்கு பாதை அமைத்து 40 வாட்ஸ் LED விளக்குகள் 9 எண்ணமும் ஆக மொத்தம் 23 எண்ணம் தெருவிளக்கு அமைக்கவும், தெருவிளக்குகள் பொருத்துவதற்கான மதிப்பீட்டு மற்றும் மின்வாரிய மதிப்பீட்டு கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ.4.80 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
(இ1/1718/2021-திலி)

**தீர்மானம் எண்: 20 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

---

4) திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம் வார்டு எண்: 25-ல் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள பழைய பழுதடைந்த கட்டிடங்கள் மிகவும் மோசமான, ஆபத்தான நிலையில் உள்ளதால், மேற்படி கட்டடங்களை இடித்து அப்புறப்படுத்தி விட்டு ''சீர்மிகு நகரம்'' திட்டத்தின் கீழ் Guest House கட்டிடம் கட்டும் பணி துவங்குவதற்கு மேலாண்மை இயக்குநர், ''சீர்மிகு நகரம்'' திட்டம், திருநெல்வேலி மாநகராட்சி அவர்களின் வேலை ஆணை எண்: 5/2021-22/SCM, நாள்: 31.12.2021-யின் படி வேலை ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பழைய பழுதடைந்த கட்டிடங்களில், மேற்படி அலுவலகத்தின் பழைய கோப்புகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்துவதால், மேற்படி பழைய கட்டிடத்தில் உள்ள கோப்புகளை பாதுகாத்திட மற்றும் மாற்று இடவசதி இல்லாததால் மண்டல அலுவலக வளாகத்தின் தென் பகுதியில் அமைந்துள்ள சேவை மையம் கட்டிடத்தின் முதல் தளத்தில் G.I. Color Roof Shed மூலம் Store Room அமைத்து கொடுத்தால் தான் மேற்படி கோப்புகளை பாதுகாக்க இயலும். எனவே, அலுவலக கோப்புகளை பாதுகாப்பாக பராமரித்திட G.I. Color Roof Shed அமைக்க ரூபாய் 5.60 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, திட்டப் பணியின் அவசர அவசியத்தை கருதி, பழைய பயன்படுத்த இயலாத மோசமான நிலையில் உள்ள கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்த வேண்டியுள்ளதால், மேற்படி பழைய கட்டிடங்களில் உள்ள கோப்புகளை பராமரித்து பாதுகாக்க வேண்டிய முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் உடனடியாக பணி மேற்கொள்ள உள்ளூர் விலைபுள்ளிகள், பெற்று மேற்படி பணியை மேற்கொள்ள பெறப்பட்ட மூன்று உள்ளூர் விலை புள்ளிகளின் விபரம்.

1. **ஸ்ரீ அம்மன் ஸ்டீல்ஸ்,**
   **1/586-2,** புது நத்தம் சாலை, தாகூர் நகர்,
   திருப்பாலை, மதுரை – 625 014 -மதிப்பீட்டை விட 0.5% குறைவாக

2. **திரு. Mathi Steel Designers,**
   **185,** மேல மாசி தெரு,
   மதுரை – 625 001 - மதிப்பீட்டை விட 1% அதிகமாக

3. **திரு. Modern Industries,**
   **J-16, 2nd cross,** அண்ணா நகர் மேற்கு,
   குழிதலை, கரூர் – 639 104 - மதிப்பீட்டை விட 1.50% அதிகமாக

மேற்கண்ட திட்டப் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும், மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் உடனடியாக மேற்கொள்ள செலவினத் தொகை **ரூபாய் 5,60,000/-** ஆகும். எனவே, மேற்படி பழைய கட்டிடங்களில் உள்ள கோப்புகளை பராமரித்து பாதுகாக்க வேண்டிய முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, மேற்கண்ட பணியை மேற்கொள்ளவும்,

அதற்கான மதிப்பிட்டு தொகை **ரூபாய் 5,60,000/-க்கு** நிர்வாக அனுமதியும் மேலும் மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள பெறப்பட்ட விலை புள்ளிகளில் குறைந்த விலை புள்ளியான மதிப்பீட்டை விட 0.50% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் **ஸ்ரீ அம்மன் ஸ்டீல்ஸ்** நிறுவனத்தின் விலைப்புள்ளியை அங்கீகரிக்கவும், தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994-ஆம் வருடத்திய சட்டம் பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம் வார்டு எண் 25-ல் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள பழைய பழுதடைந்த கட்டிடங்கள் ஆபத்தான நிலையில் உள்ளதால், மேற்படி கட்டடங்களை இடித்து அப்புறப்படுத்தி விட்டு ‘‘சீர்மிகு நகரம்’’ திட்டத்தின் கீழ் Guest House கட்டிடம் கட்டும் பணி துவங்குவதற்கு மேற்படி பழைய கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தவதால், மேற்படி பழைய கட்டிடத்தில் உள்ள கோப்புகளை பாதுகாத்திட, மேற்கண்ட சேவை மையம் கட்டிடத்தின் முதல் தளத்தில் G.I. Color Roof Shed மூலம் Store Room அமைத்து கொடுத்தால் தான் மேற்படி கோப்புகளை பாதுகாக்க இயலும். எனவே, அலுவலக கோப்புகளை பாதுகாப்பாக பராமரித்திட G.I. Color Roof Shed அமைக்க ரூபாய் 5.60 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பழைய கட்டிடங்களில் உள்ள கோப்புகளை பராமரித்து பாதுகாக்க வேண்டிய முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு மதிப்பீட்டுத் தொகை **ரூ.5.60 லட்சத்திற்கு** நிர்வாக அனுமதியும், மேலும் மேற்படி பழைய கட்டிடங்களில் உள்ள கோப்புகளை பராமரித்து பாதுகாக்க வேண்டிய முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994ஆம் வருடத்திய சட்டம் பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொள்ளவும் மற்றும் மதிப்பீட்டை விட 0.50% குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் **ஸ்ரீ அம்மன் ஸ்டீல்ஸ்** நிறுவனத்திற்கு வேலை ஆணை வழங்கியதற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 21 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

---

5) திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம், வார்டு எண் 11 முதல் 18 மற்றும் 20 முதல் 25 வரையிலுள்ள, வார்டு பகுதிகளில் அடி பம்புகள் அமைந்துள்ளன. மேற்கண்ட அடிபம்புகளை பராமரிப்பு பணி செய்திட ஆணையாளர், திருநெல்வேலி மாநகராட்சி, அவர்களின், வேலை ஆணை ம.எண் : 22/2020-21, நாள் : 01.06.2021-ன்படி, அடிபம்பு மற்றும் விசைப்பம்புகளை ஓராண்டுக்கு பராமரிப்பு பணிகள் (வேலை கூலி ஆட்கள் மட்டும்) ஒப்பந்ததாரர் திரு S.செல்வம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பராமரிப்பு பணிகளுக்கு தேவையான உதிரி பாகங்கள் அலுவலகத்திலிருந்து வழங்கப்பட வேண்டும், ஆனால் அடிபம்புகளின் உதிரிப்பாகங்கள் அலுவலகத்தில் குறைவாக உள்ளது. தற்போது கடும் கோடை காலமாக இருப்பதால் தாமிரபரணி ஆற்றில் நீர் குறைந்து வருவதால், பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு அடிபம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து, பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டியுள்ளது. எனவே, கோடை காலத்தில் தண்ணீர் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு, மேற்படி அடிபம்புகளின் உதிரிப்பாகங்கள் வாங்க வேண்டி உள்ளது. எனவே, தேவைப்படும் உதிரி பாகங்களின் விபரம்

| வ.எண் | உதிரிப்பாகங்களின் பெயர் | வ.எண் | உதிரிப்பாகங்களின் பெயர் |
|---|---|---|---|
| 1 | 3No.Kavery Model Handle | 10 | Mark II Top |
| 2 | 3No.Valve Washer | 11 | Mark II Bearing |
| 3 | 2No.Valve Washer | 12 | Mark II Handle axle ss set |
| 4 | 2No.Handle | 13 | 1000lit PVC Water Tank |
| 5 | 1 1/4" GI Pipe 'B' class (ISI) | 14 | 500lit PVC Water Tank |
| 6 | 1 1/4" GI Coupling | 15 | 1Hp Submersible motor |
| 7 | 3No.Cup Washer (ISI) | 16 | Mark II Piston |
| 8 | 2No.Cup Washer (ISI) | 17 | Mark II Lower Valve |
| 9 | Mark II Lower Valve | | |

மேற்கண்ட அடிபம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய தேவைப்படும் உதிரிப்பாகங்களை வாங்கி வழங்கிட ரூ.1,45,098/- (Without G.S.T & L.W.F.) ஆகும் மேலும் மேற்படி பணியை மேற்கொள்ள பொதுபணித்துறை மற்றும் குடிநீர் வடிகால் வாரிய விலைப்பட்டியலில் (PWD & TWAD SOR) விலை விகிதம் இல்லாததால், உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று பணி மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மதிப்பீடு தயார் செய்ய பெறப்பட்ட மூன்று உள்ளுர் விலை புள்ளிகளின் விபரம்.

1. **திரு. S. செல்வம்,**
   17, வரதராஜபுரம் தெரு,
   திருநெல்வேலி – 627001. - **ரூ. 1,45,098/-**

2. **சிவபால குரு கண்ஸ்ட்ரக்ஸன்,**
   10C, அழகப்பபுரம் தெற்கு தெரு,
   பாளையங்கோட்டை, திருநெல்வேலி – 627008. - **ரூ. 1,47,233/-**

3. **திரு. S. ஜான் ஜெலஸ்டின்,**
   30, விநாயகர் தெரு,
   பாளையங்கோட்டை, திருநெல்வேலி – 627002. - **ரூ. 1,46,210/-**

எனவே, கோடை காலமாக இருப்பதால், பாளை மண்டல வார்டுக்கு உட்பட்ட பகுதிகளின் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு, அடிபம்பு மற்றும் விசைப்பம்புகளின் பழுதுகளை சரிசெய்திட, அடிபம்பு உதிரிபாகங்கள் வாங்கி வழங்கிட, மேற்படி பெறப்பட்டுள்ள மூன்று விலை புள்ளிகளில் குறைந்த விலை புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் **திரு. S. செல்வம்** அவர்களின் விலை புள்ளியை அங்கீகரித்து ரூ.1.70 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை **ரூ.1,70,000/-** க்கு நிர்வாக அனுமதியும், மேலும் மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள பெறப்பட்ட விலை புள்ளிகளில் குறைந்த விலை கொடுத்துள்ள **திரு. S. செல்வம்** அவர்கள் கொடுத்துள்ள விலைப்புள்ளியை அங்கீகரிக்கவும் மற்றும் தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994-ஆம் வருடத்திய சட்டப் பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பாளையங்கோட்டை மண்டலம், வார்டு எண் 11 முதல் 18 மற்றும் 20 முதல் 25 வரையிலுள்ள, வார்டு பகுதிகளின் அடிபம்புகளில் ஏற்படும் பழுதுகளை, சரி செய்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர. தேவையான உதிரி பாகங்கள் அலுவலகத்திலிருந்து வழங்கப்பட வேண்டும், ஆனால் அடிபம்புகளின் உதிரிப்பாகங்கள் அலுவலகத்தில் குறைவாக உள்ளது. தற்போது கடும் கோடை காலமாக இருப்பதால் தாமிரபரணி ஆற்றில் நீர் குறைந்து வருவதால், பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு அடிபம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து, பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டியுள்ளது. தேவைப்படும் மேற்கண்ட

உதிரிப்பாகங்களை வாங்கி வழங்கிட உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று அதில் குறைந்த விலை புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் **திரு.S.செல்வம்** அவர்களின் விலை புள்ளியை அங்கீகரித்து **ரூ.1.70** லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை **ரூ.1,70,000/-** க்கு நிர்வாக அனுமதியும், மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு, பொதுமக்களின் நலனை கருதி, தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994ஆம் வருடத்திய சட்டப் பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொள்ளவும் மற்றும் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **திரு.S.செல்வம்** அவர்களுக்கு வேலை ஆணை வழங்க, மாமன்ற அனுமதி வழங்கலாம்.

## தீர்மானம் எண்: 22 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

---

**6)** திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம் வார்டு எண் 14-யில், (புதிய வார்டு எண்: 8) ஞானனந்தர் தெரு, ஆபுத்திரன் தெரு, தளவாய் அம்மன் கோயில் தெரு ஆகிய பகுதிகளில் மழை காலங்களில் மழைநீர் தேங்கி அப்பகுதியில் உள்ள குடியிருப்புகளில் மழைநீர் மற்றும் கழிவு நீர் புகுந்து சுகாதாரக்கேடு ஏற்பட்டு வருகிறது எனவும் அதனை சரி செய்து தரும்படி திரு.கே.பிரபாகரன், பாரத ரத்னா டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் மன்றம், சமாதானபுரம், பாளையங்கோட்டை. அவர்கள், மாநில மனித உரிமை ஆணையத்திற்கு புகார் மனு எண்: 2087, நாள்: 17.12.2020, அன்று புகார் மனு அனுப்பி உள்ளார்கள். மேற்படி புகார் மனுவின் மீது தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணைய வழக்கு எண்: SHRC No: 629/22/37/2020/C3-ன் படி 18.01.2021, 16.03.2021, 03.12.2021, 28.01.2022, 18.03.2022 ஆகிய தேதிகளில் வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது. மேற்படி வழக்கில் மேற்கண்ட பகுதிகளில் உள்ள மழைநீர் மற்றும் கழிவுநீர் முதலியன வடிந்து செல்லும் வகையில் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மாண்புமிகு நீதிபதி அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது, மற்றும் அப்பகுதி பொதுமக்கள் மழைநீர் மற்றும் கழிவுநீர் ஓடையை துார் வாரி தரும் படி புகார் மனு மற்றும் பத்திரிக்கை செய்தி மூலம் தெரிவித்துள்ளனர். எனவே, மாண்புமிகு நீதிபதி அவர்களின் உத்தரவின்படி மேற்கண்ட மழைநீர் மற்றும் கழிவு நீர் முதலியன, மேற்படி வழக்கில் உள்ள இடத்தில் இருந்து ஓடையானது சுமார் 425.00மீட்டர் தொலைவில் உள்ள வெட்டுவான் குளத்திற்கு சென்று அடைகிறது. மேற்படி வெட்டுவான் குளத்திற்கு சென்று அடையும் ஓடையில் பிரதான தெருக்கள் மற்றும் பகுதிகளில் இருந்து மழைநீர் மற்றும் கழிவு நீர் முழுவதும் திருச்செந்தூர் சாலையில் வந்தடைந்து, சீவலப்பேரி ரோடு குறுக்காகச் சென்று வெட்டுவான் குளத்திற்கு சென்றடைகிறது. இவ் ஓடையின் நீளம் சுமார் 425.00 மீட்டர் நீளம் ஆகும். மேற்படி ஓடையின் நடுவில் கழிவுகள் மண் குவியல்கள் முதலியன தேங்கியும் மரங்கள் மற்றும் செடி கொடிகள் வளர்ந்தும் மழை நீர் வடிய இயலாத நிலையில் தேக்கமடைந்துள்ளதால், மேற்கண்ட பகுதிகளில் மழைநீர் குடியிருப்புக்குள் புகுந்து அப்பகுதி பொதுமக்களுக்கு மிகவும் இடையூறாக உள்ளது.

மேற்கண்ட இடத்தை மாநில மனித உரிமை ஆணையத்தின் மாண்புமிகு நீதியரசர் அவர்கள் மேற்படி ஓடையை உடனடியாக போர்க்கால அடிப்படையில் மழை காலம் வருவதற்கு முன் சுத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார்கள். எனவே, வடகிழக்கு பருவமழை ஆரம்பிக்கும் முன்பு மேற்படி ஓடையில் MINI HITACHI மூலம் Silt–ஐ அள்ளி வெளியே வைக்கவும் மற்றும் மேற்படி அள்ளி வைத்த Silt-**ஐ 8 கூலி ஆடகள்** மூலம் வெளியே கொண்டு சென்று இரண்டு **டிராக்டர்களில்** நிரப்பி மாநகர எல்கைக்கு வெளியே கொண்டு தாழ்வான பகுதியில் கொண்டு நிரப்ப வேண்டியுள்ளது. மேற்படி பணியை மேற்கொள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. 3,76,320/- ஆகும். மேலும் மேற்படி பணியை மேற்கொள்ள பொதுபணி துறை மற்றும் குடிநீர் வடிகால் வாரிய விலை வகிதம் இல்லாததால் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணியை மேற்கொள்ள பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளின் விபரம்.

| வ.எண் | விலைப்புள்ளி வழங்கியவர்கள் | Mini Hitachi ஒரு மணி நேரத்திற்கு | Tractor வாகனம் நாள் ஒன்றுக்கு | கூலி ஆடகள் ஒரு நபர்/ஒரு நாள் கூலி |
|---|---|---|---|---|
| 1 | **ஆர்.கே. எண்டர்பிரைசஸ்** | 1000/- | 4000/- | 800/- |
| 2 | **க. அமராவதி** | 1200/- | 4500/- | 850/- |
| 3 | **எல். சங்கர்** | 1350/- | 5000/- | 890/- |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலை புள்ளிகளில் குறைந்த விலை புள்ளி கொடுத்துள்ள **ஆர்.கே. எண்டர்பிரைசஸ்** நிறுவனத்தின் விலைப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

எனவே, வடகிழக்கு பருவமழை ஆரம்பிக்கும் முன்பு மேற்படி ஓடையில் MINI HITACHI மூலம் Silt–ஐ அள்ளி வெளியே வைக்கவும் மற்றும் மேற்படி அள்ளி வைத்த Silt-**ஐ 8 கூலி ஆடகள்** மூலம் வெளியே கொண்டு சென்று இரண்டு **டிராக்டர்களில்** நிரப்பி மாநகர எல்கைக்கு வெளியே தாழ்வான பகுதியில் நிரப்ப வேண்டியுள்ளது. மேற்படி பணியை 15 தினங்களில் மேற்கொள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை **ரூ. 3,36,000/- ஆகும் மேலும் GST. 12% ரூ. 40,320/- ஆக மொத்தம் 3,76,320/-** ஆகும். எனவே, பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு, மேற்கண்ட பணியை மேற்கொள்ளவும், அதற்கான மதிப்பிட்டு தொகை ரூ.3,76,320/- க்கு நிர்வாக அனுமதியும் மேலும் மேற்படி பணியை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள பெறப்பட்ட விலை புள்ளிகளில் குறைந்த விலை கொடுத்துள்ள **ஆர்.கே.எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின்** விலைப்புள்ளியை அங்கீகரிக்கவும், தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994-ஆம் வருடத்திய சட்டப் பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

பாளையங்கோட்டை மண்டலம் வார்டு எண் 14-யில், (புதிய வார்டு எண்: 8) ஞானனந்தர் தெரு, ஆபுத்திரன் தெரு, தளவாய் அம்மன் கோயில் தெரு ஆகிய பகுதிகளில் மழை காலங்களில் மழைநீர் தேங்கி அப்பகுதியில் உள்ள குடியிருப்புகளில் மழைநீர் மற்றும் கழிவு நீர் புகுந்து சுகாதாரக்கேடு ஏற்பட்டு வருகிறது. எனவே, சீவலப்பேரி ரோடு குறுக்காகச் சென்று வெட்டுவான் குளத்திற்கு சென்றடையும் மழைநீர் மற்றும் கழிவுநீர் ஓடையானது சுமார் 425.00 மீட்டர் நீளம் ஆகும். மேற்படி ஓடையின் நடுவில் கழிவுகள் மண் குவியல்கள் முதலியன தேங்கியும் மரங்கள் மற்றும் செடி கொடிகள் வளர்ந்தும் மழை நீர் வடிய இயலாத நிலையில் தேக்கமடைந்துள்ளதால், மேற்கண்ட பகுதிகளில் மழைநீர் குடியிருப்புக்குள் புகுந்து அப்பகுதி பொதுமக்களுக்கு மிகவும் இடையூறாக உள்ளது. மேற்கண்ட இடத்தை மாநில மனித உரிமை ஆணையத்தின் மாண்புமிகு நீதியரசர் அவர்கள் மேற்படி ஓடையை உடனடியாக போர்க்கால அடிப்படையில் மழை காலம் வருவதற்கு முன் சுத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார்கள். எனவே, வடகிழக்கு பருவமழை ஆரம்பிக்கும் முன்பு மேற்படி ஓடையில் MINI HITACHI மூலம் Silt–ஐ அள்ளி வெளியே வைக்கவும் மற்றும் மேற்படி அள்ளி வைத்த Silt-**ஐ 8 கூலி ஆடகள்** மூலம் வெளியே கொண்டு சென்று நாள் ஒன்றுக்கு இரண்டு **டிராக்டர்களில்** நிரப்பி மாநகர எல்கைக்கு வெளியே தாழ்வான பகுதியில் நிரப்ப வேண்டியுள்ளது. மேற்படி பணியை 15 தினங்களில் மேற்கொள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை **ரூ. 3,36,000/- ஆகும் மேலும் GST. 12% ரூ. 40,320/- ஆக மொத்தம் 3,76,320/-** ஆகும். எனவே மேற்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3,76,320/-க்கு நிர்வாக அனுமதியும், மேலும் பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியை தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1994ஆம் வருடத்திய சட்டப் பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொள்ளவும் மற்றும் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **ஆர்.கே.எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு** வேலை ஆணை வழங்கியதற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 23 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

---

**7) மாண்புமிகு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் மற்றும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்கழக மேலாண்மை இயக்குநர் ஆகியோரின் அறிவுரைப்படி தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் மீன்விற்பனை பிரிவினை விரிவுபடுத்துவது தொடர்பாக அரசு மீன்விற்பனை அங்காடி அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் அதன்படி, திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம், வார்டு எண்: 20, 23வது குறுக்குத் தெரு மற்றும் சமாதானபுரம் மகளிர் காவல் நிலையம் அருகில் ஆகிய இடங்களில் 15x15 சதுர.அடி அளவில் இடம் ஒதுக்கீடு செய்து தர ஆவண செய்யுமாறு**

மேலாளர், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்கழகம், தூத்துக்குடி அவர்களின் கடிதம் ந.க.எண்:4/2021-22 நாள்: 23.09.2021- மற்றும் 15.3.2022ல் கேட்டுக் கொள்ளபட்டுள்ளது.

மேற்படி அனுமதி வழங்குதல் தொடர்பாக பாளையங்கோட்டை நகர் சார் ஆய்வாளரின் 23.12.2021-ம் தேதிய அறிக்கையின்படி பாளையங்கோட்டை, மகாராஜ நகர், உழவர் சந்தை அருகே 23வது குறுக்குத் தெருவில் மீன் விற்பனை அங்காடி அமைப்பது தொடர்பாக இடம் பார்வையிட்டதில் மேற்படி இடமானது நகரளவை கணக்குகளில் வார்டு BS பிளாக்:7, டி.எஸ்.எண்: 3, 1.04.00 பாளையங்கோட்டை நகராட்சி பெயரில் உள்ளது. மேற்படி இடத்தில் 15x15 சதுர.அடி அளவில் அங்காடி அமைத்திட இடவசதி உள்ளது. மேலும் சமாதானபுரம் வார்டு BL பிளாக்:1, டி.எஸ்.எண்: 26, 0.37.66 என உள்ளது. மேற்படி இடத்தில் ஏற்கனவே மீன்கடை அமைத்து ஓலை செட் அமைத்து மீன் விற்பனை செய்யும் இரண்டு கடைகளுக்கு நடுவே 13 அடி உள்ளது. நீளமானது 15 அடி வழங்கும் பட்சத்தில் தார்சாலை வரை வருகிறது. எனவே 10X13அடி என்ற அளவில் இடம் வழங்கினால் போக்குவரத்து நெரிசல் ஏற்படாது என பரிந்துரை செய்துள்ளார்.

மேலும் இளநிலை பொறியாளரின் 28.12.2021-ம் தேதிய அறிக்கையில் சமாதானபுரம் St.ஜான்ஸ் கல்லூரி சாலையில் மீன் வளத்துறைக்கு கடை ஒதுக்கீடு செய்ய குறிப்பிடும் இடமானது மாநகராட்சி சாலையாக உள்ளது. மேற்படி இடத்தில் கடை அமைக்கும் பட்சத்தில் போக்குவரத்திற்கு இடையூறாக ஏற்படும் வாய்ப்பு உள்ளது எனவும் மகாராஜ நகர் உழவர் சந்தையின் முன்புறம் உள்ள இடத்தில் அங்காடி அமைத்திட அனுமதி வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

அதனை தொடர்ந்து பாளையங்கோட்டை உதவி வருவாய் அலுவலர் அறிக்கையில் பாளையங்கோட்டை மண்டலம், வார்டு எண்: 20 மகாராஜ நகர் உழவர் சந்தை அருகில் மீன் விற்பனை அங்காடி 15x15 சதுர.அடியில் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்து அதற்குரிய மாதவாடகை தொகையாக ரூ.2000/- நிர்ணயம் செய்ய மாமன்ற அனுமதி பெற்று ஆணை வழங்கலாம் என்று பரிந்துரை செய்துள்ளார்.

எனவே வார்டு எண்: 20, மகாராஜ நகர் உழவர் சந்தை அருகில் மீன் விற்பனை அங்காடி 15x15 சதுர.அடி தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்கழகம் மூலம் மாதாந்திர தரைவாடகை ரூ.2000/- (இரண்டாயிரம் மட்டும்) மாநகராட்சியால் நிர்ணயம் செய்தும், மீன் வளர்ச்சிக் கழகம் சார்பில் பிரதி மாதம் 5ஆம் தேதிக்குள் மேற்படி தொகையினை செலுத்திட தெரிவிப்பது குறித்தும் மாமன்றத்தின் அனுமதிக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

பொருளில் கண்டுள்ளவாறு, திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம், வார்டு எண்:20, மகாராஜ நகர், 23வது குறுக்குத் தெரு, உழவர் சந்தையின் முன்புறம் உள்ள இடம் நகரளவு ஆவணங்களின்படி வார்டு BS பிளாக்:7, டி.எஸ்.எண்: 3 1.04.00 பாளையங்கோட்டை நகராட்சி பெயரில் உள்ளது. மேற்படி இடத்தில் 15x15 சதுர.அடி அளவில் மீன் விற்பனை அங்காடி அமைத்திடவும், அதற்கான மாதாந்திர வாடகையாக ரூ.2000/- (இரண்டாயிரம் மட்டும்) மாநகராட்சி பிரதி மாதம் 5ஆம் தேதிக்குள் செலுத்திட வேண்டும் என்ற அடிப்படையில் மாநகராட்சி இடத்தில் அங்காடி அமைத்து சம்பந்தப்பட்ட துறை மூலம் மட்டுமே நேரடியாக விற்பனை செய்து கொள்வது குறித்து மாமன்ற அனுமதி வழங்கலாம். மேலும் மேற்படி இடம் மாநகராட்சிக்கு தேவைப்படும் பட்சத்தில் மேற்காணும் ஆணையை ரத்து செய்து மாநகராட்சி மேற்படி இடத்தினை எடுத்து கொள்ளும் என்ற நிபந்தனைக்குப்பட்டு மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: டிபி2/1950/2017

**தீர்மானம் எண்: 24 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

---

**8)** திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேரூந்து நிலையத்தில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள தரைதளத்தில் 19 கடைகள் மற்றும் முதல் தளத்தில் 41 கடைகள் சேர்த்து ஆக மொத்தம் 60 கடைகளில் தரைதளத்தில் உள்ள கடைகளுக்கு சதுரஅடிக்கு ரூ.225/- எனவும், முதல் தளத்தில் உள்ள கடைகளுக்கு சதுர அடிக்கு ரூ.175/- எனவும் குறுமத்தொகை நிர்ணயம் செய்து 08.12.2021 மற்றும் 22.12.2021அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் தரைதளத்தில் உள்ள 19 கடைகளும் ஏலம் கோரப்பட்டு குத்தகை உரிமம் வழங்கப்பட்டது.

ஏனைய முதல் தளத்தில் உள்ள 41 கடைகளுக்கான உரிம இனங்களுக்கு அரசாணை எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.25.5.2009ன்படி மூன்று ஆண்டு காலத்திற்கு குத்தகை உரிமத்திற்கு விடும் வகைக்கு 10 தடவைக்கு மேல் மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரியும் நாளது தேதி வரை எவ்வித கடையும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி பெறவில்லை.

இந்நிலையில் மாநகராட்சிக்கு தொடர் வருவாய் இழப்பு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு முதல் தளத்தில் உள்ள கடைகளுக்கான குறுமத்தொகையினை சதுர அடிக்கு ரூ.175/-லிருந்து

ரூ.140/-ஆக குறைத்து மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருவது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் கண்டுள்ளபடி திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேரூந்து நிலையத்தில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள 60 கடைகளில் 08.12.2021 மற்றும் 22.12.2021அன்று நடைபெற்ற ஏலத்தில் உரிமம் பெற்ற 19 கடைகள் தவிர முதல் தளத்தில் உள்ள 41 கடைகளுக்கான உரிம இனங்களுக்கு அரசாணை எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.25.5.2009ன்படி மூன்று ஆண்டு காலத்திற்கு குத்தகை உரிமத்திற்கு விடும் வகைக்கு 10 தடவைக்கு மேல் மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரியும் நாளது தேதி வரை எவ்வித கடையும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி பெறாததால் மாநகராட்சிக்கு தொடர் வருவாய் இழப்பு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு முதல் தளத்தில் உள்ள கடைகளுக்கான குறுமத்தொகையினை சதுர அடிக்கு ரூ.175/-லிருந்து ரூ.140/-ஆக குறைத்து மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் அனுமதிக்கலாம்
**(மே.பா அ1/5339/21)**

## தீர்மானம் எண்: 25 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

---

9) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் சந்திப்பு பேருந்து நிலைய விரிவாக்கம் செய்ய கடைகள் இடித்து அப்புறப்படுத்தப்பட்டது. பேருந்து நிலைய கடை உரிம குத்தகைதாரர்கள் மீண்டும் சந்திப்பு பேருந்து நிலையத்தில் தங்களுக்கு கடை ஒதுக்கீடு செய்து தர கேட்டு திரு.எஸ்.ராஜாமணி மற்றும் 22 பேர்கள் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு Special Leave Petition (Civil) No.29477-29483 of 2019, திரு. ஹெறக்டர்ராபின்சன் என்பவர் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு Special Leave Petition (Civil) No.29330 of 2019 மற்றும் திரு.என்.சுகுனா மற்றும் பலர் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு Special Leave Petition (Civil) No.30486 – 30499 of 2019 ஆகியவற்றிற்கு உச்சநீதிமன்றத்தில் அரசாணை எண் 36 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ME-1) நாள்: 1.3.2017 மற்றும் அரசாணை எண் 432 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ME-1) நாள்:29.10.2018ன்படியும் (Counter

Affidavit) எதிர்வாதுரை ஆவணம் தாக்கல் செய்த வகைக்கு Thiru. I. Ganesan, Standing Government Counsel, Supreme Court of India அவர்களின் கடிதம் நாள் 11.8.2021-ல் கோரியதற்கு அரசாணை எண் 462 ந.நி(ம) கு.வ.துறை (ME1) நாள் 30.11.2016ன்படி வழக்கு ஒன்றிற்கு ஆஜராகிய வகைக்கு ரூ.10,000/- வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில்

| | | | | |
|---|---|---|---|---|
| Special Leave Petition (Civil) No.29477-29483 of 2019 | - | 7 x 10000/- | = | 70,000/- |
| Special Leave Petition (Civil) No.29330 of 2019 | - | 1 x 10000/- | = | 10,000/- |
| Special Leave Petition (Civil) No.30486 – 30499 of 2019 | - | 14 x 10000/- | = | 1,40,000/- |
| Total | | | | 2,20,,000/- |

மேற்படி தொகை ரு 2,20,000/- வழங்க மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

நிர்வாக நலன் கருதி பொருளில் குறிப்பிட்டுள்ள வழக்கிற்கு மாண்புமிகு உச்சநீதி மன்றம், டில்லியில் திருநெல்வேலி மாநகராட்சி சார்பாக எதிர் ஆணையுறுதி ஆவணம் தாக்கல் செய்த வகைக்காக (Counter Affidavit) ரூ 2,20,000/- ல் ஏற்கனவே அதிகமாக வழங்கிய ரு 10,000ஐ கழித்து ரூ 2,10,000/-மட்டும் Thiru. I. Ganesan, Standing Government Counsel, Supreme Court of India அவர்களுக்கு வழங்கிட மாமன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண் அ1/39/2020**

**தீர்மானம் எண்: 26 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

---

**10)** திருநெல்வேலி மாநகராட்சியின் 2020-2021-ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மாமன்றத்தின் பார்வைக்கு

**அலுவலகக் குறிப்பு**

திருநெல்வேலி மாநகராட்சியின் 2020-2021 ஆண்டுக்கு நிர்வாக அறிக்கையை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண் சி1/2319/2020

## தீர்மானம் எண்:27 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

---

**11)** திருநெல்வேலி மாநகராட்சியில் மாண்புமிகு மேயர், மரியாதைக்குரிய துணை மேயர் மற்றும் அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு உடனுக்குடன் பொது மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு செல்போன் சிம்கார்டு (Sim card) வழங்குவது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலகக் குறிப்பு**

திருநெல்வேலி மாநகராட்சியில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் பொதுமக்களுடன் தொடர்பு கொண்டு உடனுக்குடன் பொது மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு மாண்புமிகு மேயர், மரியாதைக்குரிய துணை மேயர் மற்றும் 53 மாமன்ற உறுப்பினர்களுக்கும் ஏர்டெல் நிறுவனம் மூலம் சிம்கார்டு மாதாந்திர கட்டணம் ரூ. 299 + 18% சேவை வரி என்ற திட்டத்தில் வழங்கவும் இதற்காக ஆண்டுதோறும் ஏற்படும் தொடர் செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(சி2/3683/2021)

## தீர்மானம் எண்:28 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

---

**12)** திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டலம் வார்டு எண் 10-ல் பரணி நகர் விரிவாக்க பகுதி K.R.Rani Nagar பகுதியில் ஏற்கனவே அமைந்துள்ள 9 மின் கம்பங்களில் புதியதாக மின் இணைப்பு வயர்கள் அமைத்து 20W LED மின் விளக்குகள் பொருத்தவும் அதற்கான செலவினம் ரூ.1,60,000/- (ஒரு லட்சத்து அறுபதாயிரம்) மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம் வார்டு எண் 1-ல் பரணி நகர் விரிவாக்க பகுதி K.R.Rani Nagar பகுதி பொது மக்களின் கோரிக்கையின் அடிப்படையிலும் பொது மக்களின் நலன் கருதி 9 மின் கம்பங்களில் புதியதாக மின் இணைப்பு வயர்கள் அமைத்து 20W LED மின் விளக்கு புதியதாக அமைத்திடவும், அதற்கான செலவினம் ரூ.1,60,000/- (ஒரு லட்சத்து அறுபதாயிரம்) மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் இ1-65-2022**

**தீர்மானம் எண்: 29 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

---

**13)** திருநெல்வேலி மாநகராட்சி, பாளைமண்டல அலுவலகத்திற்குட்பட்ட பாளையங்கோட்டையில் புதியதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள தரைத்தளக் கடைகளை சதுரடி ஒன்றுக்கு ரூ.175/- வீதமும், முதல் தளக் கடைகளைசதுரடிஒன்றுக்குரூ.110/- வீதமும் நிர்ணயம் செய்யப்பட்டு பகுதி கடைகள் ஏலதாரர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பெரும்பாலான கடைகளுக்கு பன்னிரெண்டு முறை ஏலம்/ஒப்பந்தபுள்ளி கோரியதில் ஒருவரும் கலந்துகொள்ளாத நிலையில் உள்ளதால் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டும்,மாநகராட்சியின் வருவாயினை ஈட்டும் வகையிலும் குறுமத்தொகையினை கீழ்க்கண்டவாறு குறைத்து மறு நிர்ணயம் செய்யலாம்.

| கடை கட்டிட விபரம் | 24.01.2022 அன்றுநிர்ணயம் செய்ததொகை (சதுரடிஒன்றுக்கு ) ரூ. | 01.05.2022 முதல் மறு நிர்ணயம் செய்யப்படவேண்டியதொகை (சதுரடிஒன்றுக்கு ) ரூ. |
|---|---|---|
| தரைதளம் | 175/- | 125/- |
| முதல் தளம் | 110/- | 75/- |

மேற்கண்ட குறுமத் தொகையை மறுநிர்ணயம் செய்வதுகுறித்துமாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

பொருளில் கண்டவாறு பாளை பேருந்து நிலைய கடைகளுக்குரிய குறுமத்தொகையினை மறுநிர்ணயம் செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.அ1/3990/2021 (பா.ம)**

**தீர்மானம் எண்: 30 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

---